ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,124 **ஆவணி** மாதம்

# தமிழ்மொழியில்தான் தென்குமரி முதல் வடஇமயம் வரை பூசை செய்ய வேண்டும்



இந்துமதக் கோயில்கள்
சுற்றுலாக் காட்சிப் பொருளாக
இருக்கின்றன. இவைகளைப்
பொதுமக்களின் குறைகளைப்
போக்குகின்ற
அருளூற்றுக்களாக மாற்றிட
தமிழ்மொழியில்தான் பூசைகள்
செய்திட வேண்டும்.
தமிழ்மொழி எழுத்துக்கள்தான்
இந்துமதக் கடவுள்களின்
வடிவமைப்பும்,
உயிர்நாடியும் ஆகும்.

இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞாறுச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

# உள்ளுறை

1. **"இந்துவேத மாநாட்டு செயற்குழு கூட்டத் தீர்மானங்கள்"** - இந்துவேத மாநாடு நடத்தப் போகும் முன் அதற்கான செயற்குழு சந்தித்த போது, அதில் குருதேவர் அவர்களின் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.
2, **"இந்து வேத பாடசாலைக்காகவும் இந்து வேத மாநாட்டிற்காகவும் மேற்கொள்ளப்படும் அருட்பணி விரிவாக்கத் திட்டம்"** - மாற்று மத மந்திரவாதிகளின் பாதிப்புக்களிலிருந்தும், நாள்கோள்மீன் பாதிப்புக்களிலிருந்தும் அனைத்து மக்களையும் காக்கக் கூடிய எளிதான பரிகார முறைகள் இந்தக் கட்டுரையில் குருதேவர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளன.
3. **"தவறு செய்தவர்களுக்கும், செய்பவர்களுக்கும், செய்யப் போகிறவர்களுக்கும் வழங்கப்பட்ட திருவாணை பெற்ற குருவாணை"** - சித்தரடியான் ஒருவருக்கு எழுதப்பட்ட அஞ்சலின் மூலம் அனைத்து சித்தரடியான்களுக்கும் குருதேவர் விடுத்த குருவாணை அறிவுரை அஞ்சல்.
4. **"இந்துவேத பாடசாலை, இந்துவேதம் அச்சிடல் முறையாகவும், நிறைவாகவும், விரிவாகவும் நிகழ்ந்திட நிதியளிப்பீர்!!"** - குருதேவர் அவர்களின் அருளாசியுடன் துவக்கப்பட்டுள்ள இந்த நிறுவனங்களுக்கு நிதி கேட்டு வழங்கப்பட்ட அறிவிக்கை எண்: 1363.
5. **"குருவாக்கியங்கள்"** - 'தமிழர்களின் மறு சிந்தனைக்கு' என்ற தலைப்பில் குருதேவர் அவர்களால் எழுதப்பட்ட நெடிய கட்டுரையில் உள்ள குருவாக்கியங்களில் சில.

# இந்துவேத மாநாடு

## செயற்குழு கூட்டத் தீர்மானங்கள்

21-7-91,
தலைமைப்பீடம்.

1. இமயம் முதல் குமரி வரை உள்ள எல்லாக் கோயில்களிலும் தமிழ்மொழியில்தான் அருட்சினை செய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் இந்துமதம் பொதுமக்களிடையில் அவரவர்களுடைய குறைகளைப் போக்குகின்ற நம்பிக்கையுள்ள மதம் என்ற நிலை பெற்றிடும். அதாவது இன்றைய நிலையில் தமிழ்நாடு தவிர இந்தியாவில் உள்ள எல்லாக் கோயில்களிலும் பூசை செய்வதற்கு அருள் மருந்தாகவும் கிடைப்பதில்லை, விருந்தாகவும் கிடைப்பதில்லை. இந்துமதக் கோயில்கள் சுற்றுலாக் காட்சிப் பொருளாக இருக்கின்றன. இவைகளை அருளூற்றுக்களாகவும், அருட்கனி மலர்ச் சோலைகளாகவும் மாற்றிப் பயன் உள்ளவைகளாக ஆக்கிடத் தமிழ்மொழியில்தான் பூசைகள் செய்திட வேண்டும். தமிழ்மொழி எழுத்துக்கள்தான் இந்துமதக் கடவுள்களின் வடிவமைப்பும், உயிர்நாடியும் ஆகும். இதேபோல் தமிழ்மொழிச் சொற்களின் ஒலி நயங்கள்தான் இந்துமதக் கடவுளுடன் தொடர்பு உண்டாக்கித் தரும். எனவே, தமிழ்மொழியில்தான் குமரி முதல் இமயம் வரை பூசை செய்ய வேண்டும்.

2. தமிழ்மொழிதான் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழி. இதனுடைய சொல் ஒலி நயங்களின் மூலம், அனைத்து வகைப்பட்ட பயிரின உயிரின ஒலிகளையும் ஒலித்துக் காட்ட முடியும். எனவே, இதுதான் முழுமையான மொழி. இந்த மொழியில் மந்திர எழுத்துக்கள், சொற்கள், சொற்றொடர்கள் என்ற மூன்றின் ஒலிநயங்களின் மூலம் கல், மண், மணல், மரம், உலோகம் முதலிய எல்லாவகைப்

பொருட்களிலும் செய்யக் கூடிய சிலைகளுக்கு உயிர்ப்பு ஊட்ட முடியும். எனவேதான் இந்த உலகிலேயே ஆரம்பம் முதல் இன்று வரை உருவ வழிபாடு இருக்கிறது. ஏனென்றால் புதியதாக செய்கின்ற உருவங்களுக்கு உயிர் ஊட்டும் உயிர்ப்புக் கலைகளும், பழைய சிலைகளுக்கு மீண்டும் உயிர் ஊட்டும் புத்துயிர்ப்புக் கலைகளும் இந்து மதத்தில்தான் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன. இந்தக் கலைகள் தமிழ் மொழியில்தான் இருக்கின்றன என்பதால், தமிழ் மொழிக்கும் உலக மொழிகளுக்கும் உள்ள தொடர்பு எப்பொழுது அறுபட்டதோ; அதாவது தமிழர்கள் உலக நாட்டு மக்களோடு வணிகத்தின் மூலம் கொண்டிருந்த தொடர்பு எப்பொழுது நின்றதோ அது முதல் உலக நாடுகளில் சிலைகளுக்கு உயிர் ஊட்டுவதும், புத்துயிர்ப்பு ஊட்டுவதும் தடைப்பட்டு, குறைந்து, மறைந்து போயின. இதனை உரோமானியா, சிரியா, மெசபடோமியா, எபிரேயம், எகிப்து, பாரசீகம், சீனம், ... முதலிய நாடுகளில் உருவ வழிபாடு வீழ்ச்சியுற்ற வரலாறு மூலமாகத் தெரிந்து கொள்ளலாம்.

அதாவது, தமிழர்களோடு தொடர்பு கொண்டு தமிழ் மந்திரங்களை, அந்தந்த நாட்டு மக்கள் தங்கள் தங்களுடைய மொழிகளுக்கு ஏற்ப உச்சரித்துப் பூசை செய்யும் வழக்கம் இருந்திட்ட வரை உருவ வழிபாடு அல்லது சிலை வழிபாடு எல்லா மதங்களிலும் இருந்திட்டது. அதற்குப் பிறகு சிலைகளிலும், கோயில்களிலும் பல்வேறு காரண காரியங்களால் அருளாற்றல் குறைந்தபோது, அவற்றைச் சரி செய்வதற்கு தமிழ்மொழியும் இல்லை, தமிழர்களும் இல்லை. எனவேதான், உலகில் உள்ள எல்லா மதங்களிலும் உருவ வழிபாடு குறைந்து ஆற்றல் இழந்து போயின. இந்தப் பேருண்மையின் மூலம் உலகம் முழுதும் உள்ள மதங்கள் அனைத்துக்குமே பதினெண்சித்தர்களுடைய சித்தர் நெறியெனும் இந்துமதம்தான் அடிப்படையாக இருந்தது, இருக்கிறது என்பது விளங்குகிறது. அதாவது, அண்ட பேரண்டங்களிலிருந்து வந்த பதினெண்சித்தர்கள்தான், இந்த உலகம் முழுவதுமுள்ள

அருளூற்றுக்களைக் கண்டுபிடித்து, அவற்றின் அருளணு வெளிப்பாட்டு நிலைகளுக்கு ஏற்பப் பல்வேறு வகையான சிலைகளையும், கருவறைகளையும், கோயில்களையும் உருவாக்கினார்கள். அதே நேரத்தில் ஆங்காங்கே இருந்த மக்களின் மொழிகளுக்கு ஏற்ப தமிழ் மொழியின் ஒலி நயங்கள் கெடாமல் பூசைமொழிகளையும், விதிகளையும் வகுத்துக் கொடுத்தார்கள்.

இப்படி பதினெண்சித்தர்களுடைய சித்தர்நெறி எனும் அருள் நெறி உலகப் பொது நெறியாக, உலகம் முழுவதும் உள்ள எல்லா மொழியினரும், இனத்தவரும், நாட்டவரும் <u>அவரவருடைய மண்ணில்</u> தோன்றக் கூடிய **திருக்கல்**, அவரவர் நாட்டில் உள்ள பயிரினங்களில் தோன்றக் கூடிய **தருக்கல்**, அவரவர் நாட்டு உயிரினங்களில் தோன்றக் கூடிய **கருக்கல்**, அவரவர் நாட்டில் அருளாளர்களாகப் பதினெண்சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட **குருக்கல்** என நான்கு வகைப்பட்ட கடவுள்களை மட்டும்; <u>அவரவர் தாய்மொழியில், அவரவர் பண்பாட்டிற்கு ஏற்பப் பூசை செய்து அருளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்</u> என்று மொழி, இன, மத, நாட்டு தனித்தன்மைகளை பாதுகாக்கின்ற வகையில் உருவாக்கப்பட்டதுதான் பதினெண் சித்தர்களுடைய அருளுலகச் சித்தர் நெறியான இந்துவேதம்.

எனவே, இந்து வேதம்தான் உலக வேதம், உலகப் பொதுவேதம். இந்த இந்து வேதம்தான் உலகம் முழுவதும் உள்ள எல்லா மொழி மக்களுக்கும், இன மக்களுக்கும், நாட்டு மக்களுக்கும் உரியதாகத் தோற்றுவிக்கப்பட்டது. அதாவது மலையிலிருந்து ஓடி வருகின்ற ஆறு பல கிளை ஆறுகளாகப் பிரிந்து வந்து நாடு முழுவதும் பாய்வது போல்; அண்டபேரண்டங்களிலிருந்து வந்த இந்து வேதம் எனும் ஆறு பல்வேறு கிளைகளாகப் பிரிந்து உலக மக்கள் அனைவருக்கும் சென்று சேருகின்றது. இதையே "இந்து வேதம், இந்து மதம், இந்து வேத மதமான இந்து மதம் எனும் ஆலமரத்தின்

இலேகளாகவும், கிளேகளாகவும், விழுதுகளாகவும்தான் உலகம் முழுதும் மதங்கள் தோன்றும் அல்லது தோன்ற முடியும்" என்று இந்து வேதம் கூறுகின்றது. எனவே, எதிர்பாராமல் தாய்மரத்திலிருந்து விடுபடக் கூடிய விழுதுகளும், விழுதுகளோடு கூடிய கிளேகளும், தனிக் கிளேகளும் தோற்றுவிக்கக் கூடிய புதிய புதிய ஆலமரங்களாகத்தான் இந்த உலகில் மதங்கள் தோன்ற முடியும். இதைத் தவிர ஆலமரத்தின் பழங்களில் இருந்து கிடைக்கும் விதைகள் மூலமும் ஆலமரக் கன்றுகளாகப் புதிய புதிய மரங்கள் கிடைப்பது போல் புதிய மதங்கள் தோன்றும்.

இப்பேருண்மையினே விளக்கமாகக் கூற வேண்டுமேயாஞல்; என்றைக்கு எந்த மதம் தோன்றிஞலும் சரி, அந்த மதத்தால் [1]கடவுள்கள் பற்றியோ, [2]கடவுள்களின் உலகங்களேப் பற்றியோ, [3]கடவுள்களின் பிறப்பு இறப்பு பிறப்பிறப்பற்ற பெருநிலே பற்றியோ, [4]கடவுள்களின் ஆண் பெண் அலி நிலே பற்றியோ; [5]கடவுள்களில் திருக்கல், தருக்கல், கருக்கல், குருக்கல் என்ற நான்கு வகைக் கடவுள்களேப் பற்றியோ; [6]கடவுள்களின் அருவ நிலே, அருவுருவ நிலே, உருவஅருவ நிலே, உருவ நிலே என்ற நான்கைப் பற்றியோ; [7]விரும்புபவர்கள் தொடர் முயற்சிகளாலும், குருவழிப் பயிற்சிகளாலும் கடவுள்களே சந்திக்கலாம், அல்லது கடவுள்கள் தங்களேச் சந்திக்க வரச் செய்யலாம்; கடவுள்களே மனிதர்களாகப் பிறப்பு எடுக்க வைக்கலாம்; மனிதர்கள் கடவுளாக மாறலாம்; .... என்ற செய்திகளேப் பற்றியோ ஊசிமுனே அளவு கூட எந்த செய்தியையும் எந்த மதமும் கூற முடியாது, எந்த அருளாளர்களும் கூற முடியாது.

இன்னும் சொல்லப் போஞல் பதினெண்சித்தர்களுடைய தத்துவத் தொடர்பு இன்றி; அல்லது மொழி, இன, நாட்டுச் செயல்நிலே தொடர்பின்றி எந்த ஓர் அருளாளரும் கடவுளேப் பற்றிக் கூற முடியாது; கடவுளேச் சந்தித்ததாகக் கூற முடியாது; கடவுளேப்

பிறருக்குக் காட்ட முடியாது. இன்னும் சொல்லப் போனால் உலக அருளாளர்கள் தங்களைக் கடவுள்களின் வாரிசுகளாகவோ அல்லது கடவுள்களின் பதிலிகளாகவோ அல்லது கடவுள்களின் தூதுவர்களாகவோதான் தங்களைப் பற்றிக் கூற முடியும். ஆனால், யாருமே பதினெண்சித்தர்களுடைய அண்டபேரண்டமாளும் சித்தர் நெறியான சீவநெறி எனும் இந்து வேத மதமான இந்து மதத்தின் அருளாளர்களைப் போல் தாங்களே கடவுளாக மாறவும், பிறரைக் கடவுளாக மாற்றுவதற்கு முயலவும் முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது. **இதுதான் இந்துமதத்தின் சிறப்பு, இந்து வேதத்தின் தனித்தன்மை.**

3. “இந்து மதம் இந்த மண்ணுலக மக்கள் அனைவருக்கும், எல்லா வகைப்பட்ட பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் அருளை வழங்குகின்ற பொது மதம். ஏனென்றால் இந்த இந்து மதத்தில்தான் அருகம் புல், தருப்பைப் புல், ஆவாரஞ் செடி, எருக்கம் செடி, ... கள்ளி மரம், ஆல மரம், அரச மரம் முதலிய பயிரினங்கள் ஒளி வடிவம் பெற்று மோட்சத்திற்குச் சென்றிருக்கின்றன. ஈ, எறும்பு, நத்தை, நண்டு, சிலந்திப் பூச்சி, கரிச்சான் குருவி, புறா, கிளி, காக்கை, கழுகு, நாரை, பசுமாடு, யானை, ... முதலிய பலவகைப்பட்ட உயிரினங்களையும் கடவுள்கள் நேரில் தோன்றி மோட்சத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

இப்படிப் பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் மோட்சம் கொடுத்த பட்டியலே அதிகம் இருக்கின்ற போது; முக்கொம்பு காட்டிலிருந்து 100 ஆண்டுகளுக்கு மேல் இந்துவேதத்தைப் பரப்ப முயன்றும், இந்துமதத்தை மறுமலர்ச்சி செய்ய முயன்றும் நினைத்தது போல் வெற்றி பெற முடியாமல்; பிறம்மதேவன் ஆகிய எம்மை அழைத்து இந்து வேதத்தை எழுதித் தரச் சொல்லியுள்ள ஞானாச்சாரியார், இந்து மதத் தந்தை, 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா

சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் விருப்பப்படி 11வது முறையாக இந்துவேதத்தை எழுதித் தருகிறோம். எமது நோக்கிலும், போக்கிலும் இதில் [1]64 முறை சிவபெருமான்கள் தாங்களே நேரில் வந்து திருவிளையாடல் புரிந்ததையும், 63 நாயன்மார்கள் மூலம் அருளுலகத்தை விளக்கிச் செயல்பட்டதையும்; [2]கடவுள்களில் ஒருவரான திருமால் ஒன்பதுமுறை தாமே மானுடக் கருவில் தோன்றிச் செயல்பட்டதையும், பன்னிரண்டு ஆழ்வார் மூலம் செயல்பட்டதையும்; [3]பதினெண்சித்தர்கள் படைத்த 108 வகை திருப்பதிகளிலும், 243 வகை சத்தி பீடங்களிலும், 1008 வகை சீவ ஆலயங்களிலும் தொடர்ந்து அருளாற்றல் வெளிப்பட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்து வருவதையும்; பிறம்ம தேவனாகிய யாம் விளக்கி உரைத்தோம். எம் முன்னால் அமர்ந்திருக்கும் நூற்றுக்கணக்கான சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும் அருட்கோட்டங்கள் அமைத்து அருளை அநுபவப் பொருளாக வழங்கிச் செயல்பட்டு; உலக மதங்கள் அனைத்துக்கும் மூலக் கரு இந்து மதமும், இந்து வேதமும்தான் என்ற பேருண்மையை நிலைநாட்டவேதான் இந்துவேத முழக்கங்களை முழங்க எல்லோரும் தயாராகுங்கள்; உயிரினங்கள் நன்மையடையும், நன்மையடையும், நன்மையடையும்.”

4. ‘இந்து’ என்ற சொல் இந்தியாவில் உள்ள எந்த மொழியிலும் இல்லை, தமிழ்மொழியில் தவிர. இதேபோல் ‘இந்தியா’ என்ற சொல்லுக்கு இந்தியாவில் உள்ள 86 மொழிகளில் தமிழ்மொழியில் தவிர வேறு ஒரு மொழியில் கூடப் பொருள் இல்லை. உலக மதங்களிலேயே பத்தி, சத்தி, சித்தி, முத்தி எனும் நான்கினைத் தருவதற்கு வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருக்கின்ற காயந்திரி என்கின்ற பூசைமொழி தமிழ்மொழியைத் தவிர வேறு எந்த மொழியிலும் இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை. காயந்திரி என்ற சொல்லுக்குரிய பொருள்:- காயம் + திரி => காயந்திரி; ‘காயம்’ என்பது உடல்,

பொருள், உயிர், ஆவி, ஆன்மா என்னும் ஐந்தின் கூட்டுப் பொருளாகும்; இந்தப் பூசைமொழியினைச் சொன்னால் இந்த ஐந்தும் திரிந்து, அதாவது இந்த ஐந்தும் உரிய பக்குவநிலை பெற்று பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைப் படிப்படியாகப் பெறும். இதற்கு உதவுகின்ற பூசைமொழிதான் காயந்திரிப் பூசைமொழி.

இப்படி [1] இந்து வேதம், இந்து வேத மதமான [2] இந்து மதம், இந்து மதத்தின் அல்லது அருளுலகத்தின் உயிர்நாடிப் பூசைமொழியான [3] காயந்திரி, இவை அனைத்தும் தோன்றிய நாடான [4] இந்தியா ஆகிய அனைத்துச் சொற்களும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன. எனவே, தமிழ் மொழிதான் இந்து மத அருளாட்சி மொழி, இந்துமதப் பூசை மொழி, இந்துமதத் தெய்வ மொழி, தேவ மொழி, கடவுள் மொழி, மனிதனைக் கடவுளாக்கும் மொழி, மனிதனைக் கடவுளை சந்திக்க வைக்கும் மொழி, கடவுளை நேரில் வரவழைக்கும் மொழி, அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழி. எனவே, தமிழர்கள்தான் அருளுலகின் வாரிசுகள், நாயகர்கள், மூலவர்கள், தலைவர்கள், தத்துவ வித்துக்கள்.

எனவே, தமிழ்மொழியின் மலர்ச்சியே இந்துமதத்தின் மலர்ச்சி; தமிழர்களின் விடுதலையே இந்துமதத்தின் விடுதலை; தமிழின வரலாறே இந்துமத வரலாறு; தமிழ்நாடே இந்துமதத்தின் பிறப்பிடம், இருப்பிடம்; தமிழ்மொழியில்தான் இந்து மதத்தின் இந்து வேதம் இருக்கின்றது; இந்து மதத்தின் பூசைமொழிகள், தத்துவங்கள், செயல் சித்தாந்தங்கள், வரலாறுகள், இலக்கியங்கள் ... முதலிய அனைத்தும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன. இப்பேருண்மைகளை முதலில் தமிழர்களை உணரச் செய்ய வேண்டும். இதற்குத்தான் இந்துவேத மாநாடு கூட்டப்படுகின்றது.

5. இந்துவேத மாநாடு ஏன்? இது இந்துமத மாநாடு அல்ல. இது ஓர் இலக்கிய மாநாடு. அதுவும் இந்த உலகிலேயே முதல் மொழி, மூத்த மொழி, தொன்மையான மொழி, பழமையான மொழி

என்று சொல்லப்படும் தமிழ் மொழியில் உள்ள இந்துவேத இலக்கியங்களை உலகம் முழுவதும் உணரும்படிச் செய்வதற்கு நிகழ்த்தப்படும் இலக்கிய மாநாடு. இது ஏன் இப்பொழுது கூட்டப்படுகின்றது என்றால்; இன்றைக்கு இந்து மதத்தில் உள்ள தலைவர்கள், மடாதிபதிகள், ஆச்சாரியார்கள், சன்னிதானங்கள், பண்டாரங்கள் என்று இருப்பவர்களில் யாருக்குமே [1] இந்து, [2] இந்து வேதம், [3] இந்து மதம், [4] இந்துவேத மதமான இந்து மதம், [5] இந்துமத வரலாறு, [6] இந்துமத வாழ்வியல், [7] இந்துமதச் சமுதாயம், அரசியல், .... என்று நேரிடையாகத் தலைப்பிட்டுப் பேசத் தெரியவில்லை, புரியவில்லை, முடியவில்லை; பேசுவதற்குரிய இலக்கியச் சான்றுகளும், ஊன்றுகளும் இல்லை. ஏனென்றால், இங்கே குறிப்பிட்ட அனைத்தும் தமிழ் மொழியில்தான் இருக்கின்றன என்ற பேருண்மை எவருக்குமே ஏறத்தாழத் தெரியாது, தெரியாது, தெரியாது, தெரியவே தெரியாது.

இதைவிடக் கேவலம் என்னவென்றால், இந்தப் பேருண்மையைத் தெரிந்த சிலரும், இப்பேருண்மையை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை, இல்லை, இல்லை, தயாராகவேயில்லை. எனவே, இந்துமதத்திற்கு வருங்காலமே இல்லை என்ற நிலை வந்துள்ளது. எனவேதான், இந்துவேதம் பற்றிய இந்த மாநாடு நடத்தப்படுகிறது. இதன் மூலம் உலகில் உள்ள எல்லா மதங்களும், மதங்களின் வரலாறுகளும், தத்துவங்களும், சித்தாந்தங்களும், பூசை மொழிகளும், பூசை விதிகளும், பூசைக்குரிய கோயில்களும், மற்ற நடைமுறைகளும் மூட நம்பிக்கைகளிலிருந்து விடுபடும்; கண்மூடித்தனமான மடமைகளிலிருந்தும் விடுபடும்; முரட்டுத்தனமான பிடிவாதங்களிலிருந்தும் விடுபடும்; வறட்டுத்தனமான மத மாற்று வழிகளிலிருந்தும் விடுபடும்; எல்லா மதங்களிலும் அருளை அநுபவப் பொருளாகப் பெறக்கூடிய வாய்ப்பு உண்டாகும். அதாவது மனித வாழ்வு மேம்படும். இந்த உயரிய நோக்கத்திற்காகத்தான் இந்துவேத மாநாடு கூட்டப்படுகிறது.

6. இன்றைக்கு சைவம், அத்வைதம், துவைதம், மாத்வம், வைணவம், சாக்தம், லிங்காயத்வம் ... என்ற பெயர்களால்தான் தனித்தனி மதங்கள் இருக்கின்றனவே தவிர; இந்து மதம் என்ற பெயரால் ஒரு மதம் இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை. எனவேதான், இந்துவேத மாநாட்டின் மூலம் **இந்து மதம் எனும் ஆலமரத்தின் கிளைகளாகவும், விழுதுகளாகவும், இலைகளாகவும் இருப்பவைகளே இந்தியாவில் இன்றைக்கு மேலே குறிப்பிட்ட பிரிவுகள் அனைத்தும்** என்பதை எல்லோருக்கும் உணர்த்துவதற்குத்தான் இந்துவேத மாநாடு நடத்தப்படுகிறது.

அதாவது, தமிழ்மொழியில் உள்ள இந்து வேதம்; அதுவும் எளிய, இனிய, எல்லோருக்கும் புரியக்கூடிய உரைநடைத் தமிழ்மொழியில் இருக்கின்ற இந்து வேதத்தை, முதலில் தமிழர்கள் அனைவரும் புரிந்து கொண்டு தங்களுக்குள் இருக்கின்ற சாதிமத வெறிகளையும், போட்டி பொருமை சண்டை சச்சரவுகளையும் அகற்றி விட்டு; இந்து வேதம் என்ற பெயரின் கீழ், சொல்லின் கீழ் தமிழர் அனைவரும் ஒன்றுபட்டே ஆக வேண்டும். இப்படித் தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதற்காகவே இந்த இந்துவேத மாநாடு கூட்டப்படுகிறது. அப்படித் தமிழன் ஒற்றுமைப்பட்டால்தான் உலக பொதுத் தத்துவமான, உலக மானுட மேம்பாட்டின் தத்துவமான இந்து வேதத்தின் மூலம் உலகம் ஒற்றுமைப்படும், இந்தியா ஒற்றுமைப்படும். எனவே, இது உலக இந்து மறுமலர்ச்சி இயக்கமாகும். அதாவது, இந்து வேதத்தை உலகம் முழுவதும் பரப்புவதற்காக, உலக நன்மைக்காகவே (2000 ஆண்டுகளுக்கு முன்னுல்) ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற ஓர் ஒப்புயர்வற்ற இயக்கம்தான் உலக இந்து மறுமலர்ச்சி இயக்கமாகும்.

7. இன்றைய நிலையில் இந்துமதம் பிழைக்குமா? தழைக்குமா? வருங்காலத்தில் இருக்குமா? என்ற கேள்விக்குறி வந்து விட்டது.

a. இந்துமதத்தின் தலைவர்கள், அரசியல் வாதிகள், சமுதாய வாதிகள், மடாதிபதிகள், பீடாதிபதிகள் .... முதலிய யாருக்குமே இந்துமதம், இந்துவேதம் என்றால் தெரியாது, தெரியாது, தெரியாது.

b. இந்துமதக் கோயில்களில் இருக்கின்ற குருக்கள், அர்ச்சகர்கள், பூசாறிகள் என்ற யாருக்குமே இந்துமதம், இந்துவேதம், இந்துமத வரலாறு, இலக்கியங்கள் .... என்பவை புரியாது. அவர்கள் இந்து என்ற சொல்லைச் சொல்லுவதில்லை.

c. ஊர்ப் பொதுவில் பல்வேறு மதங்களுக்கிடையில் இந்துக்கள் தங்களுடைய மதத்தைப் பற்றிப் பேசுவதற்கு, கூறுவதற்கு அநுமதியில்லை. அதாவது, இந்து மதக் கோயில்கள் அனைத்தும் இந்து மதத்திற்கு அன்னியமானவர்களின் கையில் இருக்கிறது; அல்லது இந்து மதத்தை நேரடியாக வளர்க்கவும், காப்பாற்றவும் தெரியாத அப்பாவிகளின் கையில் இருக்கிறது. எனவே, இவர்களைத் திருத்துவதற்கு இந்து வேத மாநாடு கூட்டப்படுகிறது.

d. **இந்துமதத்தின் உயிர்நாடியே அல்லது கொள்கையே அல்லது குறிக்கோளே மக்களுக்கு மந்திரித்து அருளை மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கி [1]உடல்நோய், [2]உயிர்நோய், [3]நாள் கோள் மீன் பாதிப்பு, [4]காற்று கருப்பு பேய் பிசாசு பாதிப்பு, [5]மந்திரவாதி பாதிப்பு, [6]சாபம், கண்ணேறு பாதிப்பு ... முதலிய பாதிப்புகளிலிருந்து மக்களை விடுவிப்பதேயாகும்.** இந்த மாபெரும் செயல்திட்டத்திற்காகத்தான் கோயில்களிலே குரு, குருக்கள், குருமார், பூசாறி, அருளாளி, அருளாடு நாயகம், மருளாளி, மருளாடு நாயகம், சோதிடர், முக்காலக் கணிச்சி, கணியர், குறிகாரன், .... முதலியவர்களை இந்துவேதம் உருவாக்கிற்று. ஆனால், இப்பொழுது கோயில்களில் உள்ள குருக்கள், அர்ச்சகர், பூசாறி என்பவர்களில் யாருக்குமே மந்திரிக்கத் தெரியாது; மந்திரிப்பவர்களை செயல்பட அநுமதிப்பதில்லை என்ற நிலையில்தான்

இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் இந்துவேத பாடசாலை, இந்துவேதப் பள்ளிக் கூடம், இந்துவேதக் கல்லூரி, இந்துவேதப் பல்கலைக் கழகம் முதலியவைகளைத் தோற்றுவித்து செயல்படுவதின் மூலம் திருத்துவதற்காகத்தான் இந்துவேத மாநாடு கூட்டப்படுகிறது.

e. இதுபோல், 'வாருங்கள் பூசாறிகளே, குருக்கள்களே, அர்ச்சகர்களே, இந்துவேத முறைப்படி பூசை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்; மந்திரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.' என்று கூறுகின்ற வல்லமையும், செயல்திட்டமும் இந்துவேத பீடமான பதினெண் சித்தர் மடத்தில்தான் இருக்கிறது; இந்து வேதமான தமிழ் மொழியில்தான் இருக்கிறது. எனவே, இந்துவேத மாநாடு தமிழ் மொழியில் கூட்டப்படுகிறது.

8. இன்றைக்கு இந்தியா முழுவதுமுள்ள கோயில்களில் மொத்த எண்ணிக்கையில் அதிகமான இந்துமதக் கோயில்கள் இங்கு தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. அடுத்தாற்போல வேதக் கோயில்கள், ஆகமக் கோயில்கள், ஆரணக் கோயில்கள், சுருதிக் கோயில்கள், மீமாம்சைக் கோயில்கள், ... முதலிய அனைத்துவகைக் கோயில்கள் இருக்குமிடம் தமிழகம்தான். இந்த அனைத்து வகைப்பட்ட கோயில்களில் பூசை செய்யப்படும் ஒரே மொழி தமிழ்மொழிதான்; ஒரே வேதம் தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான். எனவேதான், இந்தப் பேருண்மையினை உலகம் முழுவதும் உள்ள இந்துக்களுக்கு அறிவிப்பதற்குத்தான் இந்துவேத மாநாடு கூட்டப்படுகிறது.

9. இந்துவேத மாநாட்டின் மூலம் இந்துமதத் தலைவர்கள், ஆச்சாரியார்கள், மடங்கள், சன்னிதானங்கள், ஆதினங்கள், திருச்சபையினர், வாரவழிபாட்டு மன்றத்தினர், பசனை மடத்தினர் முதலியவர்களை அழைத்து இந்துவேத மதம்தான் இந்து மதம் என்ற உண்மையை விளக்க வேண்டும். இந்துமதத்திற்கென்று வேதம் உண்டு. அந்த வேதம் **இந்து வேதம்** எனப்படும். இந்த வேதத்தின்

மூலமாகத்தான் இந்த மதம் **இந்து மதம்** என்று அழைக்கப்படுகிறது. அதாவது இந்து மதத்திற்கென்று மிகத் தெளிவான வரலாறும், வேத அடிப்படையும், அருளாளர்களின் பட்டியல்களும், வகைவகையான கோயில்களின் பட்டியலும், கடவுள்களின் பட்டியலும் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன என்ற பேருண்மைகளை விளக்கவே இந்துவேத மாநாடு கூட்டப்படுகின்றது.

10. இந்துவேத உண்மைகளையும், இந்துமத உண்மைகளையும் இந்துமதத்தின் மேட்டுக்குடி மக்களுக்கு உணர்த்தினால் போதும்; அல்லது இந்துமதத்தின் தலைமைச் சத்திகளுக்கு உணர்த்தி விட்டால் போதும். இந்துமதத்தின் எல்லாவகையான நலிவு, மெலிவு, ஏக்கம், தேக்கம், வீக்கம், அடக்கம், முடக்கம் .... முதலிய அனைத்தையும் அகற்றி விடலாம், அகற்றி விடலாம், அகற்றியே விடலாம். இந்தக் கொள்கையின் அல்லது நோக்கத்தின் செயல்வடிவே இந்துவேத மாநாடு. அதாவது இந்துவேத மாநாடு இந்து மதத்தின் சாதாரண அப்பாவிப் பாமரப் பொதுமக்களை கூட்டி வைத்துப் பேசுவதற்காகக் கூட்டப் படவில்லை. அதாவது, இந்து மதம் தெரியாத இந்துக்களே! இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் தெரிந்து கொள்ள வாருங்கள்.

**இதை எழுதியவர்**: அருள்மிகு அகத்தியர் சன்னிதானம் மு. இராமனுசதாசு, காரைக்குடி.

**இடம்**: 3, தென்றல், N.G.O. காலனி, பொன்னேரி, செங்கை அண்ணா மாவட்டம் - 601204.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: காரைக்குடி சித்தரடியார் திரு மு. இராமானுசதாசு அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்து வேத பாடசாலைக்காகவும் இந்து வேத மாநாட்டிற்காகவும் மேற்கொள்ளப்படும்

# அருட்பணி விரிவாக்கத் திட்டம்

1) மாற்று மதத்தவர்களாலும், நாள் கோள் மீன் பாதிப்புக்களாலும் துன்பப்படக் கூடிய மக்களுக்கு மிகக் குறைந்த செலவில் எளிதான முறையில் பரிகாரங்கள் பத்தாவது, பதிஞேராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் செய்யப்பட்ட முறை மீண்டும் செயலுக்குக் கொண்டு வரப்படுகிறது.

(i) ரூபாய் ஒன்று (ரூ.1/=) காணிக்கை என்று குறிக்கப்பட்டுள்ள சன்னமான மெல்லிய முடிகயிறு சாதாரணப் பாதிப்புடையவருக்கு நாலு முதல் எட்டு கயிறு கொடுக்கப்பட்டு (அவர்களின் பாதிப்புகளுக்கேற்ப) அவர்கள் அன்றுடம் காலையிலோ அல்லது மாலையிலோ ஒரு கயிற்றை வலது கை மணிக்கட்டில் கட்டிக் கொள்ள வேண்டும். அதை மறுநாள் அதே நேரத்தில் அவிழ்த்து வீட்டிலேயே ஏதேனும் எண்ணை விளக்கேற்றி அதில் காட்டி எரித்து விட வேண்டும். பிறகு மற்றொரு கயிறைக் கட்டிக் கொள்ள வேண்டும். அந்தக் கயிற்றை மறுநாள் அதே நேரத்தில் விளக்குச் சுடரில் காட்டி எரித்து விட வேண்டும். இப்படித் தொடர்ந்து நான்கு அல்லது எட்டு நாட்களுக்கு கயிறுகளை எரிக்க பாதிப்புக்கள் நீங்கும். அதன்பிறகு, ரூபாய் பத்து (ரூ.10/=) மதிப்புள்ள உலோகத் தாயத்தைப் போட்டுக் கொள்ள

வேண்டும். அதைப் பதினைந்து நாட்களுக்கு அல்லது மாதத்திற்கு ஒருமுறை யாரிடம் போட்டுக் கொண்டார்களோ அவர்களிடம் காட்டிப் புதிதாகப் போட்டுக் கொள்ள வேண்டுமா அல்லது அதே தாயத்து போதுமா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

(ii) இந்தக் கருப்புக் கயிறு மணிக்கட்டில் கட்டியதை மாற்றியது போலவே ரூ.2/= காணிக்கைக்குரிய கழுத்தில் போடும் முடிகயிறு கருப்பு அல்லது சிவப்பை அதிகமான பாதிப்புள்ளவர்கள் நாலு முதல் எட்டு கயிறுகள் அன்றுடம் அணிந்து மறுநாள் எரித்து விட வேண்டும். இதுபோல் நாலு அல்லது எட்டு நாட்கள் ஆன பிறகு ரூ.10/= மதிப்புள்ள உலோகத் தாயத்து அணிந்து கொள்ள வேண்டும். அதைப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை அல்லது ஒரு மாதத்திற்கு ஒருமுறை நமது சன்னிதானங்களில் யாரிடமாவது காட்டி புதிதாகத் தாயத்து மாற்ற வேண்டுமா? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தேவையென்றால் புதிதாக உலோகத் தாயத்து அணிந்து கொள்ளலாம்.

(iii) ரூ.3/= மதிப்புள்ள மூலிகைத் தாயத்து மூன்று அல்லது ஆறு வாங்கிக் கொள்ள வேண்டும். இதனை அணிந்து கொள்பவர்கள் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களில் தங்கள் கழுத்தில் அணிந்திருக்கும் மூலிகைத் தாயத்தைக் கழற்றி (செவ்வாய் அணிந்து வெள்ளிக்கிழமை அதைக் கழற்ற வேண்டும். மீண்டும் வெள்ளி அணிந்து ஞாயிற்றுக் கிழமை கழற்ற வேண்டும். மீண்டும் புதிதாக ஞாயிறன்று அணிந்து செவ்வாய்க்கிழமை கழற்ற வேண்டும்.) அடுப்பிலோ அல்லது நெருப்பு தனியாகப் பற்ற வைத்தோ எரித்து விட வேண்டும். பின்பு, புதிய மூலிகைத் தாயத்து அணிந்து கொள்ள வேண்டும். மூன்று அல்லது ஆறு தாயத்துக்கள் எரித்த பிறகு உலோகத் தாயத்து ரூ.10/= மதிப்புள்ளது ஒன்றை அணிந்து கொள்ள

வேண்டும். அதைப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறையோ அல்லது மாதத்திற்கு ஒருமுறையோ யாராவது ஒரு சன்னிதானத்திடம் காட்டி புதிதாக தாயத்து மாற்ற வேண்டுமா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி மாற்ற வேண்டியிருப்பின் புதிதாக தாயத்து வாங்கி அணிந்து கொள்ள வேண்டும்.

(iv) ரூ.5/= மதிப்புள்ள பின்னல் கயிறு வாரம் ஒருமுறை அணிய வேண்டும். அதாவது, எந்தக் கிழமையில் அணிகிறோமோ அந்தக் கிழமையில் பழைய கயிற்றை எரித்து விட்டு வேறு புதிய கயிறு மாற்றிக் கொள்ள வேண்டும். இப்படி நாலு முதல் எட்டு கயிறுகள் பாதிப்புக்கேற்ப மாற்றி விட்டு உலோகத் தாயத்து மாற்றிக் கொள்ள வேண்டும். அதைப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை சன்னிதானங்களிடம் காட்டி புதிதாகத் தாயத்து மாற்ற வேண்டுமா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். புதிதாகத் தாயத்து மாற்ற வேண்டும் என்றால் மாற்றிக் கொள்ள வேண்டும்.

(v) கடுமையான பாதிப்புக்களோ அல்லது நாள்பட்ட பாதிப்புக்களோ இருந்தாலும் சரி, அல்லது பொதுவாகப் பாதுகாப்பு வேண்டும் என்று விரும்பினாலும் சரி, அவர்களுக்கு ஆண், பெண் அல்லது சிறியவர், பெரியவர் என்ற வேறுபாடின்றி ரூ.10/= மதிப்புள்ள உலோகத் தாயத்து அல்லது உருத்திராட்சம் கட்டிவிட வேண்டும். இதைக் குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டுமா என்பதை ஏதேனும் ஒரு சன்னிதானத்திடம் கேட்டுக் கொள்ள வேண்டும். புதியதை மாற்றினால் பழைய தாயத்தை மண் கலயத்தில் போட்டு; வீட்டுப் பூசையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

## நிறைவுரை:-

(i) இப்படி அருளூறு பூசனைப் பொருட்களை ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களுக்கு வழங்குவதன் மூலம்தான் இந்துமதம் ஒவ்வொருவரின் அன்றாட வாழ்விலும் மருந்தாகவும், விருந்தாகவும், தேவையான பாதுகாப்பைத் தருகின்ற காவல் சத்தியாகவும் பயன்படுகின்றது என்ற பேருண்மை விளங்கிடுகிறது. மேலும், இந்து மறுமலர்ச்சி இயக்கம், பதினெண்சித்தர் மடம், அருட்பணி விரிவாக்கத் திட்டம் ஆகியன [1]'இந்துமத ஆட்சி மீட்சி', [2]'இந்துக்களின் நல்வாழ்வு', [3]'கோயில்களின் புத்துயிர்ப்பு', [4]'பத்தி இயக்கம்', [5]'அருட்கலைகளை வளர்த்தல்', ... முதலிய திட்டங்களைச் செயலாக்க முடியும்.

(ii) நாம் அருளூறு பூசனைப் பொருட்களை வியாபார நோக்கில் வழங்கவில்லை என்பதை நமது சன்னிதானங்களும், பெறுகின்ற மக்களும் உணர வேண்டும். அப்பொழுதுதான், இன்றுள்ள பதினெண்சித்தர் மடத்தின் அருட்போர் அறிவிப்பும், அருளாட்சி அமைப்புப் பணியும் முறையாக நிகழ்ந்து, முழுமையாக நிறைவு எய்த முடியும்.

(iii) இதற்காக இந்த அருளூறு பூசனைப் பொருட்களை வழங்க முன்வருபவர்கள் மாதம் ஒருமுறை அல்லது முடிந்தபோது குருபீடத்திற்கு நேரில் வந்து அருளையும், அறிவுரையையும் பெற்றுச் செல்ல வேண்டும். இது **அருளாணை பெற்ற குருவாணை**.

**ஞானாச்சாரியார்**
**இந்துவேத நாயகம், இந்துவேத பீடம்,**
**இந்துமதத் தந்தை.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: தலைமைப்பீடச் சித்தரடியார் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# தவறு செய்தவர்களுக்கும், செய்பவர்களுக்கும், செய்யப் போகிறவர்களுக்கும் வழங்கப்பட்ட

# திருவாணை பெற்ற குருவாணை.

ஓம்

தலைமைப்பீடம்,

21-3-91, நள்ளிரவு 10:59.

அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் அவர்கள் சமூகத்திற்கு குருபீடத்திலிருந்து விடுக்கும் செயல்நிலை விளக்கப் பதில் மடல்:

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. அம்மையப்பன் திருவருளே!

2) தங்களின் 20-3-91ஆம் தேதியிட்ட அஞ்சல் (காலை 10 : 45 மணிக்கு எழுதியது) இன்று 21-3-91ஆம் தேதி மாலையில் தலைமைப் பீடத்திற்குக் கிடைத்தது. அவ்வஞ்சலை குருதேவர் கல்லூரியிலிருந்து திரும்பியதும் இரவு 7:15 மணிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு அவ்வஞ்சலுக்குரிய பதில் இரவு 8:55 மணி வரையில் பெறப்பட்டது.

3) அன்புடையீர்! நடந்தவை எல்லாம் கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்தது போல; குருவை வைத்துக் கொண்டு செயல்பட்டு விட்டீர்கள்! இது ஊழ்வினையாலும், யோகக் குறைவாலும் நடந்தது.

4) எந்தத் தாயாக இருந்தாலும் தன் குழந்தை கெட்ட வார்த்தை பேசுவதாக இருந்தால் வாயில் சூடு போடுவாள்; திருடினால் கையில் சூடு போடுவாள்; போகக் கூடாத இடத்திற்குச் சென்றால்

காலில் சூடு போடுவாள். இப்படிச் செய்வதால் அந்தத் தாய்க்கு குழந்தையின் மீது பாசம் இல்லை என்று பொருளல்ல. அக்குழந்தையின் மீது உண்மையாகவே மிகுந்த பாசம் இருக்கிறது என்று பொருள். அக் குழந்தை திருந்துவதற்காக தாய் அப்படிச் செய்கிறாள். அதுபோலத்தான் குருதேவரும் உங்களைத் திருத்துவதற்காகத் திட்டினார். அதை உங்களால் வாங்கிக் கொள்ள முடியவில்லை, தாங்கிக் கொள்ள முடியவில்லை; இன்னும் புலம்பிக் கொண்டிருக்கிறீர்கள்; யார்யாரிடமோ சென்று புலம்பி இருக்கிறீர்கள். இதற்கெல்லாம் காரணம்; தங்கள் தாய் தந்தையரோ, வீட்டுப் பெரியவர்களோ உங்களை நன்கு கண்டித்து வளர்க்கவில்லை. உங்களுக்குக் கிடைத்த தலைவரோ, நண்பர்களோ உங்களைக் கண்டித்துத் திருத்தவில்லை. நீங்களும் சிறுபிள்ளைத்தனமாக வளர்ந்து விட்டீர்கள். எனவேதான், வாத்தியார் வேலை பார்த்துக் கூட திருந்தாத ஆள் நீங்கள் என்று திட்ட நேர்ந்தது. ஏனென்றால், “நல்ல மாணாக்கன்தான் நல்ல ஆசிரியராக முடியும்” என்று குருபாரம்பரியம் கூறுகிறது. நீங்கள் நல்ல மாணாக்கனும் இல்லை, நல்ல ஆசிரியரும் இல்லை! வருந்துகிறோம்.

5) இந்த அறிவுரையும், அஞ்சலும் உங்களுக்குக் கசப்பாக இருக்கலாம். வருத்தத்தைக் கூடத் தரலாம். எனவே, நீங்கள் குருதேவரைப் புரிந்து கொள்ள வேண்டும். குருதேவர் தன்னல வெறியாலும், பேராசையினாலும் தனக்குத் தொண்டன் வேண்டும் என்று தொண்டனை ஆதரிக்க மாட்டார். அதாவது, தொண்டர்களின் தவறுகளைக் காணும்போது; துணிவாகக் கண்டிக்கக் கூடிய தரமும், திரமும், தீரமும், திறமும், வீரமும் உடைய தன்னிகரற்ற தலைவர்தான் உங்களுடைய குருதேவர், குவலய குருபீடம், அண்டபேரண்ட அருட்பேரரசர், ஞானாச்சாரியார், இந்துவேத நாயகம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள். “தலைவனையறிந்து தன்னையறியலாம்; தன்னையறிந்து தலைவனை அறியலாம்” என்பதுதான் சித்தர் நெறியின் கருத்து. எனவே, இனியாவது திருந்துங்கள்.

6) யாராக இருந்தாலும் சரி, தங்களுடைய தவறுகளைத் திருத்திக் கொள்வார்களே என்றால் அவர்களுக்குரிய மரியாதை குருதேவரிடத்தில் கிடைக்கும், கிடைக்கும், கிடைக்கும். இதற்கு மாறாக திருந்தி விட்டது போல் போலியாக நடிப்பவர்கள் கட்டாயம் தண்டிக்கப் படுவார்கள். **எச்சரிக்கை.**

7) பல்வேறு சிறப்புக்களைப் பெற்றுள்ள நீங்கள் குருதேவரால் உரிமைச் சுற்றமாகவும், உறவுச் சுற்றமாகவும் அறிவிக்கப்பட்டு மலையுச்சியில் கொண்டு போய் வைக்கப்பட்டிருந்தீர்கள். ஆனால், நீங்களோ **குருதேவருக்குள் நாம், நமக்குள் குருதேவர்** என்ற மாபெரும் தத்துவத்தை உணராமலும், முறையான நிறைவான குருபத்தியும் இல்லாமலும் தான்தோன்றித்தனமாகச் செயல்பட்டீர்கள். அப்படிச் செயல்பட்டது மட்டுமின்றி வாய்க்கு வந்தபடி (loose talk) குருதேவரையும், இயக்கத்தையும் உங்கள் விருப்பம் போல் விமரிசித்து விட்டீர்கள். பெருநெருப்புக்கு ஈரமில்லை என்பது போல பரப்பிறம்மம் பதினெண்சித்தர் மடாதிபதி, பதினெண்சித்தர் பீடாதிபதி, கருகுல ஆதீனம், குருமகாசன்னிதானம் என்ற தகுதிகளைப் பெற்றவர்களை யார் எப்படி விமரிசித்தாலும் அது எரிந்து கொண்டிருக்கின்ற பெருநெருப்புக்குள் விழுந்து கருகிச் சாம்பலாகிடும் துரும்பு போல ஆகிடும். அது, அவர்களை எள்முனையளவு கூட, ஊசிமுனையளவு கூடப் பாதிக்காது, பாதிக்காது, பாதிக்காது, பாதிக்கவே பாதிக்காது.

அதாவது, குருதேவரை யார் யாரோ எப்படி எப்படியோ விமரிசித்துப் பார்த்து விட்டார்கள். ஆனால், யாருடைய விமரிசனமும் குருதேவரை எள்முனையளவு கூடப் பாதிக்க வில்லை. குருதேவர், குருதேவராகத்தான் இருக்கிறார். ஏனென்றால், இம் மண்ணுலகின் ஐநூறு (500) கோடியாண்டுகளில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் தோன்றி இருப்பவரும், கடவுள்களையே படைப்பவரும், தெய்வங்கள் தொழுகின்ற பெருநிலை பெற்றவரும், கருவறை மூலவர்களின் அம்மையப்பராக விளங்குபவரும்; யாருமே சாதித்தறியாத

அரச யோகத்தையும், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானத்தையும், அண்டபேரண்ட அருட்பேரரசர் என்ற நிலையையும் சாதித்தவரும், இனிமேல் எவரும் பெற இயலாதன பெற்றவருமாக இருந்தாலும்; சித்தர்களுக்கே உரிய இலக்கணத்தின்படிப் பார்த்தால் மனிதரைப் போல் இருக்கின்றார், வேர்த்தால் குளிக்கிறார், பசித்தால் புசிக்கிறார். எந்தவிதமான உலகியல் கடந்த தோற்றத்தையோ அல்லது வாழ்வியலையோ உருவாக்கிக் கொள்ளாமல் தொண்டர்களோடு தொண்டராக மிகமிகச் சாதாரண நிலையிலே வாழ்கிறார். இதை எல்லோராலும் புரிந்து செயல்பட முடியவில்லை, புரிந்து செயல்பட முடியவில்லை, புரிந்து செயல்பட முடியவில்லை. இனிமேல் உங்களைப் போன்றோர்கள் மூலமாவது பலரும் குருதேவரைப் புரிந்து கொள்ளும் நிலை உருவாகட்டும், உருவாகட்டும், உருவாகட்டும்.

8) குருதேவர் உங்களது அஞ்சலைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். காணாமல் போன நொண்டியாடு திரும்ப வந்தால் ஆட்டுக்காரன் எவ்வளவு மகிழ்வானோ அதுபோல் பன்மடங்கு மகிழ்ந்தார். அதாவது, குருதேவர் தாங்கள் தங்கள் துணைவியாரின் பாதிப்பிற்காக நேரடியாகத் தெரிவிக்காத நேரத்தில் கூடப் பலநூறு ரூபாய் செலவில் பூசைகள் செய்தார். இதை எண்ணிப் பார்ப்பீர்களேயானால் குருதேவருக்கு யார் மீது உள்ள அன்பும், உலகியல் காரணங்களால் மாறுது, மாறுது, மாறுது, மாறவே மாறுது என்பது புரியும்.

9) தாங்கள் காணிக்கையைப் பற்றி எழுதியிருக்கிறீர்கள். குருதேவர் பொருளுக்காக அருளை விற்கும் வணிகர் அல்ல. <u>உங்களுடைய தூய அன்பும், உண்மையான குருபத்தியும், தொடர்ந்து நீங்கள் ஆற்றுகின்ற அ.வி.தி. பணியும்தான் உங்களது காணிக்கை</u>. எனவே, குருவை விலைக்கு வாங்க நினைக்க வேண்டாம், விலைக்கு விற்கவும் முற்பட வேண்டாம். குருதேவர் அனைத்திற்கும் அப்பாற்பட்டவர்.

10) **குருவே திரு, திருவே குரு** என்ற தத்துவம்தான் பதினெண் சித்தர்களுடைய தத்துவம். அதாவது குருபீடம்தான் அனைத்துக்கும்

வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருக்கிறது என்பதை எவனொருவன் மெய்யாகவே உணர்ந்து வாழ்கிறானோ அவன் பிறப்பிறப்பற்ற பெருநிலையை அடைவான் என்பதுதான் பதினெண்சித்தர்கள் கூறுகின்ற அண்டபேரண்டமாளும் இந்துவேதம் கூறுகின்ற தத்துவமும், செயல்சித்தாந்தமும் ஆகும். இந்த இந்து வேதத்தின் செயலாக்கம்தான் அல்லது செயல்நிலைதான் இந்துமதம். எனவே, **தாங்களும் உண்மையுள்ள ஒரு முழுமையான இந்துவாக வாழுங்கள், பிறரையும் வாழச் செய்யுங்கள். இதுதான் நீங்கள் செய்கின்ற தொண்டு**.

11) இந்தத் தொண்டு என்பது கரையில்லாத காட்டாறும் அல்ல; வேலியில்லாத தோட்டமும் அல்ல; உங்களின் விருப்பம் போல் செயல்பட. அதாவது, பதினெண்சித்தர்களுடைய எழுத்து, சொல், சொற்றொடர், சொற்றொடர்களால் விளையும் எழுதாக் கிளவி இலக்கியங்களும், எழுதப்படும் இலக்கியங்களும் நறுக்குத் தெரித்தாற்போல் திட்டவட்டமான வடிவமைப்புகளையும், செயல்நிலைகளையும் பெற்றிருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

எனவேதான், பதினெண்சித்தர்கள் இந்துவேதத்திற்காகவும், இந்துவேதத்தின் செயல்நிலை வடிவமான இந்துமதத்திற்காகவும் தோற்றுவித்த இ.ம.இ.யின் கீழ் 48 வகைப்பட்ட நிறுவன நிருவாகங்கள் இருக்கின்றன. இந்த நிறுவன நிருவாகங்கள் தெளிவான செயல்திட்டங்களையும், வலுவான கட்டமைப்புக்களையும் உடையனவாகும். இதில் செயல்படுபவர்கள் போர்க்கால போர்க்கோல நிலையில், கண்மூடித்தனமாக தலைமையின் ஆணைக்கு உடனுக்குடன் கட்டுப்பட்டே செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் யாராக இருந்தாலும் சரி, தூக்கியெறியப்படுவார்கள் அல்லது தண்டிக்கப்படுவார்கள், கண்டிக்கப் படுவார்கள். இந்த மாபெரும் உண்மையினை குருதேவரின் வரலாறும், இயக்க வரலாறும் எண்ணற்ற சான்றுகளோடும், ஊன்றுகளோடும் விளக்குகின்றன.

அதாவது, நமது இயக்கத்தில் 14 ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டிட்ட அளப்பரிய ஆற்றல் பெற்ற அருளாளராக இருந்தாலும் சரி, அவர்கள் தலைமைக்குக் கட்டுப்பட்டுச் செயல்படாததால் தூக்கியெறியப்பட்டார்கள். அப்படித் தூக்கியெறியப்பட்ட தனிமனிதர்களால் குருதேவருக்கோ, இயக்கத்திற்கோ எத்தகைய பெரிய பெரிய எதிர்ப்புகளும், சோதனைகளும், துரோகங்களும், விரோதங்களும், இழிவுகளும், அழிவுகளும் ஏற்பட்டிட்ட போதும் கூட; அவை அனைத்தும் பெருநெருப்புக்குள் வீழ்ந்து கருகிச் சாம்பலாகிடும் துரும்புகள் போலாகி விட்டன என்பதைத் தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், நமது குருபீடம் இந்த உலகை விட மூத்தது, அண்டபேரண்டங்களை விடப் பெரியது என்பதால் எந்த நொடியில் எவர் வந்து சேர்ந்தாலும் அவர்களின் ஊழ்வினைப் பயன், விதிப் பயன், குரு பத்தி, தலைமைக்குக் கட்டுப்பட்டு நடத்தல், தியாக உணர்வு, நெஞ்சுரம், சிந்தைத் தரம், செயல் திறம் முதலியவைகளுக்கேற்ப உடனுக்குடன் அவர்களுக்கு மிகச் சிறந்த அருட்பட்டங்களும், அருளுலக அறிமுகங்களும், அருட்சித்திகளும், அந்தந்த வட்டாரங்களில் செயல்படக் கூடிய அதிகாரங்களும் வழங்கப்பட்டு வருகின்றன, வழங்கப்பட்டு வருகின்றன, வழங்கப்பட்டு வருகின்றன. இதுதான் சித்தர்களின் மரபு.

எனவே, <u>யாரும் குருதேவரிடத்திலோ, அல்லது இயக்கத்திலோ தாங்கள் செயல்பட்டிட்ட ஆண்டுக் கணக்கை வைத்து அதாவது, கால அளவை வைத்துத் தங்களுக்கு உரிமையும், பெருமையும், பதவியும், அருட்பட்டமும் தரப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது, எதிர்பார்க்கக் கூடாது, எதிர்பார்க்கக் கூடாது, எதிர்பார்க்கவே கூடாது.</u> அப்படி எதிர்பார்த்தால் ஏமாற்றமே ஏற்படும். எனவே, குருவாணையை, குருவின் திருவுள்ளத்தைப் புரிந்து; நேற்று வந்தவர்களானாலும் சரி, உங்களை விட வயதில் சிறியவர்களானாலும்

சரி, அவர்களைத் தலைவர்களாக, வழியாக, வழித்துணையாக, வழிகாட்டியாக ஏற்றுப் போற்றி அடிபணிந்து செயல்படக் கூடிய மனப் பக்குவமும், சிந்தைத் தெளிவும், தயக்கமற்ற செயல் உறுதியும் உங்களுக்கு வேண்டும், வேண்டும், வேண்டும்.

இவை உங்களிடம் சரியாக இருந்தால் உங்களுடைய பக்குவத்திற்கேற்ப எந்த நொடியிலும் மீண்டும் மிகப் பெரிய பதவிகளும், உரிமைகளும், பெருமைகளும், தலைமை நிலைகளும் உங்களுக்குக் கிடைத்திடும், உங்களுக்குக் கிடைத்திடும், உங்களுக்குக் கிடைத்திடும். அப்படி இல்லாமல் போட்டி பொறாமையாலும், அகம்பாவ ஆணவங்களாலும், வம்பு வீம்புகளாலும், குருவால் தேர்ந்தெடுக்கப்பட்டு உங்கள் வட்டாரத்தில் தலைமை தாங்கிச் செயல்படுபவர்களை மதிக்காமல் தனியாகச் செயல்பட வேண்டாம், தனியாகச் செயல்பட வேண்டாம், தனியாகச் செயல்பட வேண்டாம். ஏனெனில், உங்களால் தனியாகச் செயல்பட முடியாது; மேலும், ***தனிமரம் தோப்பாகாது*** என்பதை உணர்ந்து மேற்கு மண்டலத்தாருடனும், மற்ற மண்டலத்தாருடனும் சேர்ந்து செயல்பட முற்படுங்கள், முன்வாருங்கள். இனியும் தவறு செய்ய வேண்டாம், தயக்க மயக்கம் அடைய வேண்டாம். நீங்கள், உங்கள் வாழ்நாளில் கடைசி கட்டத்தில் இருக்கிறீர்கள். எனவே, திருந்திச் செயல்படுங்கள், திருந்திச் செயல்படுங்கள். திருந்திச் செயல்படுங்கள்.

12) <u>இந்த நெடிய அஞ்சல் உங்களுக்காக எழுதப்பட்டது அல்ல. தவறு செய்தவர்களுக்கும், தவறு செய்து கொண்டிருப்பவர்களுக்கும், தவறு செய்யப் போகிறவர்களுக்கும் சேர்த்து எழுதப்பட்டது.</u>

**<u>திருவாணை பெற்ற குருவாணை.</u>** இந்த அஞ்சலை நல்ல கறுப்பு மையில் ஒவ்வொரு சொல்லுக்கும் இடைவெளி விட்டு, ஒவ்வொரு வரிக்கும் இடைவெளி விட்டு, ஒரு பக்கத்தில் 20 வரிகளுக்கு மேல் எழுதாமல் நன்கு நிறுத்தி அழகாக எழுதி அதை Xerox நகல் எடுப்பதற்காக அனுப்பி வையுங்கள். இந்த அஞ்சலின்

கருத்து தங்களைப் புண்படுத்துகிறது என்று வருந்த வேண்டாம். இந்த அஞ்சலைப் பலருக்கும் படித்துக் காட்டிக் கையொப்பம் பெற்றுக் கொள்ளுங்கள். இது பாவ மன்னிப்பையும், சாப நீக்கத்தையும் தேடித் தரும் அரிய மருந்து. இந்த அஞ்சலின் நகலெடுக்கும் பணியை அருளாட்சி நாயகத்தின் போர்க்கால போர்க்கோல அருளாணையாக ஏற்றுச் செயல்படுத்துங்கள். இந்த அஞ்சலால் நீங்களும் இருளுக்குள் போய்விட வேண்டாம். உங்களுக்குள்ளும் இருள் வந்து விட வேண்டாம். இந்த அஞ்சல் முழுக்க முழுக்க தத்துவ விளக்கம் ஆகும். எனவே, நேரடியாகப் பொருள் கொள்ள வேண்டாம். முன்போல் உவமானங்களையும், உவமேயங்களையும் புரியாமல் வருத்தப்பட்டது போல் வருந்த வேண்டாம். அவசரப்பட்டு யாரிடமும் அஞ்சலைப் பற்றி விமரிசித்து விட வேண்டாம். இனியாவது செயலாக்கத்திற்கு வாருங்கள். எல்லோருடனும் சேர்ந்து எல்லாப் பூசைகளிலும் கலந்து கொள்ளுங்கள்.

13) நீங்கள், இந்த அஞ்சல் உங்களைப் **பண்**படுத்துவதற்காக எழுதப்பட்டதே தவிர, உங்களைப் புண்படுத்த எழுதப்பட்டதல்ல என்ற உண்மையை முழுமையாக நம்பினால்தான் இந்த அஞ்சலால் உங்களுக்கு நன்மை விளையும். இல்லாவிட்டால் மீண்டும், மீண்டும் மனக் கலக்கமும், சிந்தைக் குழப்பமும்தான் ஏற்படும். எனவே, 'குருதேவர் உங்களுக்குள் இருக்கிறார், நீங்கள் குருதேவருக்குள் இருக்கிறீர்கள்' என்பதை உணர்ந்து பலமுறை இவ்வஞ்சலைத் திருப்பித் திருப்பிப் படியுங்கள்; நல்ல பயன் விளையும்.

தாங்கள் கட்டாயம் பிறருடைய தலைமையின் கீழ்தான் செயல்பட வேண்டும். பிறரை அதிகாரம் செய்யக் கூடாது. ஆதிக்கம் செலுத்தக் கூடாது. அதாவது, நீங்கள் இப்பொழுதுதான் இயக்கத்திற்கு வந்துள்ள ஒரு புதிய தொண்டன் போல் அனைவரிடத்திலும் அடக்கத்தோடும், பணிவோடும், மரியாதையோடும் நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், மீண்டும் தலைகுப்புற விழக்கூடிய நிலையே ஏற்படும்.

**எச்சரிக்கை**. அதாவது, யாரையும் இச்சகம் பேசியோ, அச்சுறுத்தியோ தனக்குக் கீழ் தொண்டராக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற குறுகிய போக்கையும், பெரிய பேராசை நோக்கையும் கொண்டவர்கள் அல்ல பதினெண்சித்தர்களும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், வாழையடி வாழையாகத் தோன்றும் குருபீடமான குருதேவர்களும். - **எச்சரிக்கை**.

"வா மகனே! தூய்மையோடும், வாய்மையோடும் செயல்படு. என் மீதுள்ள நம்பிக்கையும், உனது தன்னம்பிக்கையும் உனது இரு கண்களாகட்டும்" என்ற குருபாரம்பரிய வாசகங்களைச் சொல்லி உங்களை வாழ்த்துகிறார் குருதேவர்; உங்களைச் செயல்பட அழைக்கிறார். எனவே, இவற்றை புரிந்தால் புரிந்து, விரும்பினால் விரும்பி, நம்பினால் நம்பிச் செயல்படுங்கள், செயல்படுங்கள், செயல்படுங்கள். எல்லாம் நன்மைக்கே!

அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!
அம்மையப்பன்கள் திருவருளே!

ஓம் தென்னாடுடைய சிவனே போற்றி!
ஓம் எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
ஓம் அர அற நமப் பார்வதிப் பாதமே போற்றி!
ஓம் அர அற மகாதேவப் பாதமே போற்றி!
ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**அன்பு**
**குருமகா சன்னிதானம், ஞானாச்சாரியார்,**
**ஞானத் தந்தை, இந்துமதத் தந்தை, குவலய குருபீடம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்று கண்டுபிடிக்க முடியவில்லை.//**

**அறிவிக்கை எண்: 1363**

# ஞானுச்சாரியார் அருளாசியுடன் துவக்கப்பட்டுள்ள இந்துவேத பாடசாலே, இந்துவேதம் அச்சிடல்

**முறையாகவும், நிறைவாகவும், விரிவாகவும் நிகழ்ந்திட**

**நிதியளிப்பீர்!! நிதியளிப்பீர்!! நிதியளிப்பீர்!!**

இந்த உலகில் முதன்முதலில் தோன்றிய வேதமே இந்துவேதம். இந்த இந்துவேதமே அருளுலகுக்கு மூலமாகவும், முதலாகவும், வித்தாகவும் இருக்கின்றது. இந்த இந்துவேதமே, காலங்கள் தோறும் கடவுள்களாலேயே அவ்வப்போதைய நிலேமைகளுக்கேற்ப எழுதப்படும் வேதம். எனவே, கடவுள்களேப் பற்றிய உண்மைகளேயும், அருளுலகைப் பற்றிய உண்மைகளேயும் முழுமையாகத் தருகின்ற ஒரே ஒரு வேதம் இந்த **'இந்துவேதம்'**தான்.

எனவேதான், இந்த இந்துவேதம் மட்டுமே:

1. 'பிண்டங்கள், அண்டங்கள், பேரண்டங்கள், அண்டபேரண்டங்கள், நாள்கள், கோள்கள், மீன்கள், ஐம்பூத நிலேகள், இவ்வுலகின் தோற்றம், இவ்வுலகின் முடிவு, பயிரின உயிரினங்களின் தோற்ற மாற்ற ஏற்றம் பற்றிய உண்மைகள்';
2. 'ஆவி, ஆன்மா, ஆருயிர் எனும் மூன்றும் இணேந்த சீவன் பற்றிய உண்மைகள்';
3. 'முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு பற்றிய உண்மைகள்';
4. 'கடவுள்கள் மனிதர்களாகப் பிறக்கிறூர்கள், மனிதர்கள் கடவுள்களாக மாறுகிறூர்கள்'; 'கடவுள்களில் அருவக் கடவுள்கள், அருவுருவக் கடவுள்கள், உருவ அருவக் கடவுள்கள், உருவக் கடவுள்கள் எனும் நான்கு வகைக் கடவுள்கள் பற்றிய உண்மைகள்';

5. 'கடவுள்களில் தாங்களாகவே தோன்றக் கூடிய **<u>தான்தோன்றிக் கடவுள்களில்</u>** விண்ணிலிருந்தும், மண்ணிலிருந்தும் தோன்றும் <u>திருக்கல்</u>, பயிரினங்களிலிருந்து தோன்றும் <u>தருக்கல்,</u> உயிரினங்களிலிருந்து தோன்றும் <u>கருக்கல்</u> எனும் மூன்று வகைக் கடவுள்கள் பற்றிய உண்மைகள்';
6. 'கடவுள்களில் அருட்கலைகள் நாற்பத்தெட்டுக்களாலும், ஆயகலைகள் அறுபத்து நான்குகளாலும், அருளை அநுபவப் பொருளாக பிறருக்கு வழங்கும் வல்லமையைப் பெற்ற அருளாளர்களாலும் <u>தோற்றுவிக்கப்படுகின்ற</u> 'குருக்கல்' எனும் ஒரே ஒரு வகைக் கடவுள் பற்றிய உண்மைகள்';
7. 'கடவுள்களைச் சந்திக்க உதவும் பூசைவிதிகள்'; 'மனிதர்களைக் கடவுளாக்கும் பூசைமொழிகள்', 'கடவுள்களின் வகைகளையும், கடவுள்களுக்குரிய கருவறைகளின் வகைகளையும், வெட்டவெளிக் கருவறைகளின் வகைகளையும், கோயில்களின் வகைகளையும் பற்றிய தத்துவங்கள்'; 'பத்தி, சத்தி, சித்தி, முத்தி முதலியவைகளையும், அற்பச் சித்து விளையாட்டுக்களையும், அவற்றை அடைவதற்குரிய வழிவகைகளைக் கூறும் செயல் சித்தாந்தங்கள் ... முதலிய அனைத்தையும் பற்றிய உண்மைகள்'

அறிவுப்பூர்வமான அநுபவத்துக்குரிய பேருண்மைகளாக வழங்குகிறது, வழங்குகிறது, வழங்குகிறது.

இப்படிப்பட்ட <u>இந்து வேதத்தால்</u>தான் சாதி மத வேற்றுமைகளையும், போட்டி பொறாமைகளையும், சண்டை சச்சரவுகளையும், மதமாற்றச் செயல்களையும், மனித வாழ்வியல் பற்றிய பல்வேறு வகையான கலக்கங்களையும், குழப்பங்களையும், தடுமாற்றங்களையும், தயக்க மயக்கங்களையும் முழுமையாக அகற்றிட முடியும், அகற்றிட முடியும், அகற்றிட முடியும்.

இவற்றை எண்ணியே இம்மண்ணுலகை விட மூத்ததும், பழமையானதுமான பதினெண்சித்தர் மடம், **<u>அண்டபேரண்ட அருளுலக</u>**

**ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேதத்தைப் பாடசாலைகளின் மூலம் பயிற்றுவிக்கவும்; அச்சிட்ட நூல்களாக வழங்கவும் முன்வந்திருக்கிறது**.

இம்மாபெரும் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள விரும்புகின்றவர்கள், தங்களால் இயன்ற உதவியை வழங்க விரும்புகின்றவர்கள் வரவேற்கப்படுகிறார்கள், வரவேற்கப்படுகிறார்கள், வரவேற்கப்படுகிறார்கள்.

**ஞானாச்சாரியார்,**
**இந்துவேத பீடம்,**
**பதினெண்சித்தர் மடம்,**
**காரனோடை, சென்னை-600067.**

தொடர்பு:-
ஞானாச்சாரியார், அம்பத்தூர், சென்னை-600053.

**குறிப்பு:-** இக்கட்டுரை பிறசோபத்தி ஆண்டு சித்திரைத் திங்கள் 10ஆம் நாள் செவ்வாய்க் கிழமை சித்தர் கருவூராரின் நேரமான நள்ளிரவு மணி 11.00 முதல் 1.30 மணி வரை மருத்துவ மனையிலேயே நிகழ்த்தப்பட்ட தவயோகப் பூசையால் ஞானாச்சாரியாரால் அருளப்பட்டது. இது எழுதப்பட்டது புதன் அதிகாலை 2.00 மணி முதல் 2.30 மணி வரையாகும். இதனை எழுதிய திருவோலை நாயகம் அருள்மிகு உறையூர் வெற்றிவேல் தடக்கைக் காளியம்மன் சன்னிதானம் அருள்மிகு சமயாச்சாரியார் திருஞானசம்பந்தர் சன்னிதானம் சித்தரடியார் த. செயக்குமார் (23-4-91 முதல் 24-4-91க்கு உட்பட்ட நள்ளிரவில் எழுதப்பட்டது.)

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்று தெரியவில்லை.//**

# குருவாக்கியங்கள்

1. தமிழனின் தாழ்ச்சி நிலைகள் போக்கப்பட்டால்தான் இந்து மதத்தின் தாழ்ச்சி நிலைகள் போக்கப்பட்டிடும்.
2. தமிழனின் வீழ்ச்சி நிலைகள் அகற்றப்பட்டிட்டால்தான் இந்து மதத்தின் வீழ்ச்சி நிலைகள் அகற்றப்பட்டிடும்.
3. தமிழனின் இகழ்ச்சி நிலைகள் நீக்கப்பட்டிட்டால்தான் இந்து மதத்தின் இகழ்ச்சி நிலைகள் நீக்கப்பட்டிடும்.
4. தமிழனின் அடிமை நிலைகளும், மிடிமை நிலைகளும், அழிக்கப் பட்டிட்டால்தான் இந்து மதத்தின் அடிமை நிலைகளும், மிடிமை நிலைகளும் அழிக்கப்பட்டிடும்.
5. தமிழனுடைய தாழ்வு மனப்பான்மை ஒழிக்கப்பட்டிட்டால்தான் இந்து மதத்தின் தாழ்வுநிலைகள் ஒழிக்கப்பட்டிடும்.
6. தமிழன் உரிமை பெற்றிட்டால்தான் இந்து மதம் உரிமை பெறும்.
7. தமிழன் பெருமை பெற்றிட்டால்தான் இந்து மதம் பெருமை பெறும்.
8. தமிழன் வளம் பெற்றிட்டால்தான் இந்து மதம் வளம் பெறும்.
9. தமிழன் வலிமை பெற்றிட்டால்தான் இந்து மதம் வலிமை பெறும்.

**//18-12-1991இல் குருதேவரால் எழுதப்பட்ட 'தமிழர்களின் மறு சிந்தனைக்கு' என்ற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட சில குருவாக்கியங்கள்.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040)...




...பாரம்பரியத்தில்

12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த **ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம்."

\- குருபாரம்பரிய வாசகம்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

**காணிக்கை : ரூ10/-**